தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

தை 7, சுக்ல—திருவள்ளுவர் ஆண்டு 2021.

1990, சனவரி 20, சனிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வீ. பெ. துரைசாமி அவர்கள் தலைமையில் காலை 9–00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :

''நயனிலன் என்பது சொல்லும் பயனில
பாரித் துரைக்கும் உரை''

ஒருவன் பயனில்லாத வகையில் விரிவாகச் சொல்லும் சொற்கள், அவன் அறம் இல்லாதவன் என்பதை அறிவிக்கும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்.

முந்திரி தொழிற்சாலைகளுக்குத் தேவையான இறக்குமதி கச்சா முந்திரி.

*472. திரு. பொன். விஜயராகவன் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் உள்ள முந்திரித் தொழிற்சாலைகளுக்குத் தேவையான அளவு இறக்குமதி கச்சா முந்திரி கிடைப்பதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டிலுள்ள முந்திரீ பதப்படுத்தும் தொழிற்சாலைகளுக்குத் தேவையான அளவு இறக்குமதி கச்சா முந்திரி கிடைப்பதில்லை என்பது குறித்து முந்திரி பதப்படுத்தும் தொழிற்சாலைகள் இதுவரை எந்தவிதமான மனுக்களும் அரசுக்கு அனுப்பவில்லை.

கச்சா முந்திரியை யார் வேண்டுமானாலும் தற்போது இறக்குமதி வாணிபக் கட்டுப்பாட்டு கொள்கையின்படி ஓ.ஜி.எல். (Open General Licence) இனத்தின் கீழ் மத்திய அரசின் (Cashew Corporation of India) என்ற நிறுவனத்தின் அனுமதி பெற்று இறக்குமதி செய்துகொள்ளலாம்.

[1990 சனவரி 20

திரு. செங்கை சிவம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு வர்த்தக அமைச்சகத்தின் சி.சி.ஐ. நிறுவனம் கொச்சியில் கச்சா முந்திரி ஏற்றுமதி இறக்கு மதியைக் கட்டுப்படுத்தி அம்மாநிலத்தின் தொழிலுக்குத் தேவை யான கச்சா முந்திரியை ஏற்பாடு செய்கிறது. எனவே மத்திய அரசு வர்த்தக அமைச்சகத்தை நம் மாநில அமைச்சகம் வற் புறுத்தி நம் மாநிலத்திலும் தேவையான இப்படிப்பட்ட வசதியை செய்துதர அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதை இறக்குமதி செய்வதில்கூட பிரச்சினை இல்லை. இந்தத் தேவைக்கு ஏற்ப பக்குவப் படுத்தும் நிலையங்களுக்கு முந்திரிக்கொட்டைகளை இறக்குமதி செய்வதில், 1987 ஆம் ஆண்டில் 45,510 டன் இறக்குமதி செய்யப்பட்டது. 1988 ஆம் ஆண்டில் ஜனவரி முதல் செப் டம்பர் வரை 17,905 மெட்ரிக் டன்கள் மாத்திரம்தான் இறக்கு மதி செய்யப்பட்டுள்ளன. அந்த இறக்குமதியிலேகூட ஒரு திடீர்ச் சரிவு ஏற்பட்டிருக்கின்றது. இதைப் பற்றிக் கவனிக்க வேண்டியிருக்கிறது. இது குறித்து ஏற்கனவே மத்திய அரசு முந்திரி உற்பத்திக்கான ஒரு திட்டத்தை நிறைவேற்று வதற்கு முனைந்திருக்கிறது. அது குறித்து மாநில அரசு மத்திய அரசோடு தொடர்பு கொள்ளும்.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்த முந்திரி தொழிற்சாலைகள் பலவிதமாக வேலை செய்ய முடியாமல் நீண்ட நாட்களாகவே பெரிய பிரச்சினையாக இருக்கிறது. அது பரம்பரையான தொழில். மத்திய அரசு இறக்குமதி செய்து மாநிலங்களுக்கு என்னென்ன தேவை இருக்கிறதோ அதைப் பங்கீடு பண்ணுவதற்கு ஒரு கமிட்டி போட்டிருப்பதாக நான் அறிகிறேன். அது உண்மையானால், அந்தக் கமிட்டியிலே நம்முடைய தமிழ்நாட்டு அரசாங்கத்தினுடைய பிரதிநிதிகள் இருக்கின்றார்களா ? மாநில அரசினுடைய பிரதிநிதிகள் அதில் இருந்தால்தான், அந்தந்த மாநில அரசினுடைய தேவையைக் கணக்கில் எடுத்துக்கொண்டு பங்கு போடும்போது, சரியாகப் பங்கு போட வைக்கமுடியும். அப்படி ஏதாவது ஏற்பாடு இருக் கிறதா ? அப்படி பிரதிநிதிகள் இல்லை என்றால் பிரதிநிதி நியமிப்பதற்கும் நம் அரசுக்கு அதிகப்படியான கோட்டா ஒதுக்கப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேர வைத் துணைத் தலைவர் அவர்களே, நான் தொடக்கத்திலேயே இந்தக் கேள்விக்குப் பதில் அளிக்கும்போது குறிப்பிட்டிருக்கிறேன். கச்சா முந்திரியை யார் வேண்டுமானாலும் தற்போதைய இறக்குமதி வாணிபக் கட்டுப்பாட்டுக் கொள்கையின்படி மத்திய அரசினுடைய கேஷ்யூ கார்ப்பரேஷன் ஆப் இந்தியா என்ற

1990 சனவரி 20]

நிறுவனத்தின் அனுமதி பெற்று இறக்குமதி செய்துகொள்ள லாம். அதிலே மாநில அரசினுடைய பிரதிநிதித்துவம் எப்படி இருக்கவேண்டுமென்பது குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர் களுடைய கேள்வி பரிசீலிக்கப்பட்டு ஆவன செய்யப்படும்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் அதிகமான பேக்டரிகள், என்னுடைய தொகுதியிலே, விளவங்கோடு பகுதியில்தான் இருக்கின்றன. இந்த பேக்டரிகள் 3 மாதம்தான் வேலை செய்கின்றன. முந்திரி இம்போர்ட் ஈசி என்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் கேரளா விலே இருக்கின்ற ஒருசில முதலாளிகள் வாங்கி வைத்து ஒரு மாதம் அல்லது இரண்டு மாதம் வேலை செய்துவிட்டு அவர்கள் மீதி இருக்கின்ற கச்சா முந்திரியை கேரளா போன்ற வேறு பகுதிகளுக்குக் கொண்டு சென்று விடுகின்றார்கள். எனவே பேக்டரிகள் இங்கே இருந்தும் வேலையில்லாமல் இருக்கின்ற நிலைமை இருந்துகொண்டிருக்கின்றன என்பது அரசுக்குத் தெரியுமா? இந்த நிலைமைகள் பேக்டரிகளுக்கு இருக்கின்ற காரணத்தினால், எங்கள் விளவங்கோடு, கல்குளம் தாலுக்காக் களில் இன்டஸ்ட்டிரியல் சப்சிடி இல்லாமல் இருக்கிறது. அதுவும் அரசுக்குத் தெரியுமா? ஆக நிரந்தரமாக அங்கே இருக்கின்ற தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கின்ற வகையிலே கச்சா முந்திரி இறக்குமதி செய்கின்ற பொறுப்பினை அரசு ஏற்று நடத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

9–05 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மொத்தம் 170 முந்திரி பக்குவப்படுத்தும் தொழில் நிலையங்கள் இருக் கின்றன. அவற்றில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரதாஸ் அவர்கள் எடுத்துக்காட்டியதுபோல், கன்னியாகுமரி மாவட் டத்திலே மாத்திரம் 150 தொழில் நிலையங்கள் இருக்கின்றன. இந்த 170 தொழில் நிலையங்களுக்கும் ஆண்டு ஒன்றுக்கு 1,24,000 டன் கச்சா முந்திரி தேவைப்படுகிறது. அந்த அளவுக்கு நமக்கு இறக்குமதி செய்வதற்கான வாய்ப்பு இப்போது இல்லை. நம்முடைய தமிழ்நாட்டில் சராசரி முந்திரி உற்பத்தி ஆண்டு ஒன்றுக்கு 11,560 டன்கள்தான். எனவே, பெருமளவில் முந்திரி பயிரிட்டபோதிலும் கூட விளைச்சல் வளமாக இல்லாத காரணத்தால் முந்திரி உற்பத்தி குறைவாக இருக்கிறது. இவற்றை எல்லாம் கருத்தில்கொண்டு, இந்தியாவிலேயே முந்திரிக் கொட்டைகளின் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு மத்திய அரசு ஒரு பெரிய திட்டத்தை, திட்டக் குழுவின் சார்பில் செயல் படுத்தப் பரிந்துரைத்துள்ளது. அந்தத் திட்டம் செயல்படுத்தப் பட்ட பிறகு அந்தக் குறைகள் எல்லாம் நீங்கும் என்று நினைக் கிறேன்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே முந்திரித் தொழில் என்பது ஒரு பாரம்பரியமான தொழில். 1967-க்கு முன்பே 'முந்திரித் தொழில் சிறக்கிறது வடக்கே, முந்திரித் தொழில் தேய்கிறது தெற்கே' என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோஷமாக இருந்திருக்கிறது. தமிழ்நாட்டிலுள்ள முந்திரித் தொழிலைத் தேயாமல் பாதுகாப்பதற்காக, அகில இந்திய அளவில் 'முந்திரி வாரியம்' இருப்பதுபோல தமிழ்நாட்டிலும் ஒரு முந்திரி வாரியம் அமைத்துச் செயல்படுத்த அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அகில இந்திய அளவில் உள்ள வாரியம் இப்போது கேரளாவிலிருந்து செயல்படுகிறது. தமிழ் நாட்டிலும் அப்படி ஒரு வாரியம் அமைக்கலாமா என்ற கருத்து அரசுக்கு இருக்கிறது.

தமிழ்நாட்டில் உப்பு உற்பத்தி.

*1089. திரு. மெ. ஆண்டி அம்பலம் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் சராசரி உப்பு உற்பத்தி எவ்வளவு ?

(ஆ) உப்பின் தரம் உயர்த்தவும், உற்பத்தியைப் பெருக் கவும் அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): விவர அறிக்கை ஒன்று சட்டமன்றப் பேரவையில் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

கடந்த மூன்று ஆண்டுகளில் அதாவது 1986, 1987 மற்றும் 1988 ஆம் ஆண்டுகளில் தமிழ்நாட்டில் சராசரியாக பதினாறு இலட்சம் டன்கள் உப்பு உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. தற் போது சிறு அளவில் உப்பு உற்பத்தி செய்பவர்கள் பலர் பழைய முறைகளைக் கையாண்டு உப்பு உற்பத்தி செய்வதால் உப்பின் தரமும் உற்பத்தியும் குறைகின்றன. அவர்களை விஞ்ஞான முறையில் உப்பு உற்பத்தி செய்ய ஊக்குவிக்கும் வகையில் தொழில் வணிகத் துறை பயிற்சி முகாம்களை நடத்தி உற் பத்தியைப் பெருக்கி, தரத்தை உயர்த்தவும் ஏற்பாடுகள் செய்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் 40 சிறு அளவில் உப்பு உற்பத்தி யாளர்களுக்கும் இப்பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. தமிழக

TRUTH ALONE TRIUMPHS